**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**

**மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்**

**சட்டக் கற்கைகள் திணைக்களம்**

**இளங்கலை சட்டமாணி (சிறப்பு) பட்டப்படிப்பு திட்டம்**

**இறுதிப் பரீட்சை – 2022/2023**

**LLU3505 – ஒப்புரவு மற்றும் நம்பிக்கைகள் சட்டம்**

**காலம் - மூன்று(03) மணித்தியாலங்கள்**

திகதி: 06.03.2024 நேரம்: மு.ப.9.30 – பி.ப 12.30

மொத்த வினாக்களின் எண்ணிக்கை 08

ஐந்து(05) வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக. பகுதி 01 இலிருந்து இரண்டு(02) வினாக்களுக்கும், பகுதி 02 இலிருந்து மூன்று(03) வினாக்களுக்கும் விடையளிக்குக.

தெளிவற்ற கையெழுத்துக்கு பரீட்சாத்திகளுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

## பகுதி 01 – ஒப்புரவு

**இப்பகுதியிலிருந்து இரண்டு(02) வினாக்களுக்கு விடையளிக்குக.**

01. "ஒப்புரவு என்பது சட்டத்தின் ஒரு பகுதியல்ல, ஆயின் ஒரு தார்மீக நல்லொழுக்கம், இது சட்டத்தின் கடினத் தன்மை, மற்றும் அதன் எல்லை என்பவற்றை தகுதிப்படுத்தி, சீர்திருத்துவதுடன் மற்றும் பரிந்துரைக்கின்ற ஒரு தார்மீக நல்லொழுக்கம் ஆகும். இது ஒரு உலகளாவிய உண்மையாகும்: இது குறைபாடு மற்றும் பலவீனம் காணப்படுகின்றபோது அங்கு சட்டத்திற்கு உதவவும் செய்கிறது."

-*Dudley Vs. Dudley* (1705) Perc Ch 2411:24 ER 118.-

மேலுள்ள கூற்றை ஆங்கிலச் சட்டத்தில் ஒப்புரவின் தன்மை மற்றும் வளர்ச்சி என்பவற்றின் பிண்ணனியில் விமர்சன ரீதியாக பரிசீலிக்குக.

(20 புள்ளிகள்)

02.

(அ). பத்மா பழமையான பெறுமதி வாய்ந்த பல தங்கம் - முலாம் பூசப்பட்ட பித்தளைப் பொருட்களை பரம்பரையிலிருந்து வழித்தோன்றலாக பெற்றிருந்தாள். பித்தளைப்

பொருட்கள் சற்று கறைபடிந்ததால், அவை ஜீவானிஸ் என்ற முலாமிடுபவரிடம் மீண்டும் முலாமிடுவதற்காக கொடுக்கப்பட்டன. அவர் முதலில் இரண்டு வாரங்களுக்குள் மீள முலாமிடப்பட்ட பித்தளைப் பொருட்களை திருப்பித் தருவதாக உடன்பட்டார். ஆனால் இப்போது ஜீவைனிஸ் பத்மாவை தவிர்ப்பதுடன், அவர் தனக்கு பித்தளைப் பொருட்களை மீள வழங்க மாட்டார் என அவள் அச்சமடைந்துள்ளாள்.

பத்மாவுக்கு கிடைக்கப் பெறக் கூடிய ஒப்புரவு பரிகாரங்களின் பிண்ணனியில் அவளுக்கு ஆலோசனை வழங்குக.

(ஆ). Raymond Industries (PVT) Ltd என்பது காலியில் அமைந்துள்ள புகழ் பெற்றதொரு ஆடைத் தொழிற்சாலையாகும். இது ஏறத்தாழ 2500 ஊழியர்களுக்கு வேலைவாய்ப்புக்கள் வழங்குவதுடன், ஒவ்வொரு வருடமும் இலங்கைக்கு பாரிய அந்நியச் செலாவணியையும் கொண்டு வருகின்றது. தொழிற்சாலையை ஒட்டிய ஏ காணி ஏறத்தாழ 5 ஏக்கர் நிலப்பரப்பு கருங்கற்கள் வளம் கொண்டது ஆகும். இந்நிலமானது பீட்டர் என்பவரால் கருங்கல் அகழும் சுரங்கம் ஒன்றை ஆரம்பிக்கும் எண்ணத்தில் கொள்வனவு செய்யப்பட்டது ஆகும். Raymond Industries (PVT) Ltd இன் சொந்தக்காரரகிய பியலுக்கு இது பற்றி தெரிய வந்தது. பீட்டரின் நிலத்தில் கருங்கல் அகழ்வு ஆரம்பித்தால், தொழிற்சாலையில் பணிபுரியும் ஊழியர்களுக்கு சகிக்க முடியாத தொல்லையையும், உடல் நலக்கேடும் உண்டாகி விடுமோ என பியால் பயப்படுகின்றார்.

பியலுக்கு கிடைக்கப் பெறக் கூடிய ஒப்புரவு பரிகாரங்களின் பிண்ணனியில் அவனுக்கு ஆலோசனை வழங்குக.

(10 × 2 =20 புள்ளிகள்)

03. பின்வரும் முதுரைகளை அவற்றின் முக்கிய அம்சங்கள் மற்றும் நவீன நீதிச் செயன்முறையில் அவற்றின் பயன்பாடு ஆகியவற்றை விளக்குக. பொருத்தமான தீர்ப்புச் சட்டங்களுடன் உமது விடையை ஆதாரப்படுத்துக.

(அ). ஒப்புரவை நாடுபவர் தூய கரங்களுடன் வர வேண்டும்

(ஆ). பரிகாரங்கள் இன்றி ஒரு பிழை இருப்பதை ஒப்புரவு அனுமதிக்காது.

(10 × 2 =20 புள்ளிகள்)

## பகுதி 02 – நம்பிக்கைச் சட்டம்

### இப்பகுதியிலிருந்து மூன்று(03) வினாக்களுக்கு விடையளிக்குக.

04. பின்வரும் சூழ்நிலைகளில் ஒரு வலிதான நம்பிக்கை உருவாக்கப்பட்டுள்ளதா என ஆராய்க. உமது விடையினை பொருத்தமான நியதிச் சட்டப் பிரிவுகள் மற்றும் தீர்க்கப்பட்ட வழக்குகள் கொண்டு ஆதாரப்படுத்துக.

(அ). மடில்டா என்பவரால் தனது 10 வயது மகள் பிரியாவின் நன்மைக்கான மடில்டா உருவாக்கிய நம்பிக்கையின் நம்பிக்கையாளராக, தனது 15 வயது மகனாகிய கவிந்துவை நியமித்தாள்.

(ஆ). சுதத்தின் நெருங்கிய உறவினர்களின் நன்மைக்காக, நுவரெலியாவில் உள்ள கம்பனியின் பங்குகளையும், தேயிலைத் தோட்டம் ஒன்றினையும் தனது சிறந்த நண்பனாகிய சமனுக்கு கைமாற்றுகின்றான்.

(இ). ராணி ஒரு நொத்தாரிசு நிறைவேற்றம் இன்றி, ஒரு வெளிப்படையான நம்பிக்கையினை உருவாக்கக் கருதி அவளுடைய சகோதரனின் பிள்ளைகளான அமலி மற்றும் நிமல் ஆகியோரின் நன்மைக்காக தனது கணவர் சிறில் என்பவரை நம்பிக்கையாளராக நியமிக்கின்றாள்.

(ஈ). நீலா என்பவர் மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையின் அருகில் அமைந்துள்ள காணியின் உரிமையாளர் ஆவாள். மருத்துவமனைக்கு வருகை தருபவர்களுக்கு இலவச வாகனம் நிறுத்தும் வசதிகளினை செய்து கொடுப்பதற்காக அவள் தனது நிலத்தினை "மனுசுவ சங்கத்திற்கு" வழங்கினாள்.

(5 × 4 =20 புள்ளிகள்)

05. "ஒரு ஆக்க நம்பிக்கையானது, சில விடயங்களில், ஒரு வெளிப்படையான நம்பிக்கைக்கு நேர் எதிரானது; ஒரு வெளிப்படையான நம்பிக்கையானது, ஒரு உரிமையாளருடைய சொத்தின் பயனல அக்கறையினை மாற்றிக் கொடுக்கும் எண்ணத்திற்கு விளைவினைக் கொடுக்கிறது, அதேநேரம் ஒரு ஆக்க நம்பிக்கையானது, உரிமையாளர்களின் எண்ணங்களுக்கு நேர் மாறாக விதிக்கப்படலாம்"

-Lord Browne – *Wilkinson, Westdeutche Landesbank Girozentrale Vs. Islington LBC* (1996) AC 669 at 705 D -

மேலுள்ள கூற்றின் வலிதுடைமையினை நம்பிக்கைகள் சட்டம் மற்றும் தீர்க்கப்பட்ட வழக்குகள் என்பவற்றிற்கு அமைவாக பரிசீலிக்குக.

(20 புள்ளிகள்)

06. ஜூலியஸ், என்பவர் டேவிட் மற்றும் நித்யா ஆகியோரின் நன்மைக்காக பிலிப்பை நம்பிக்கையாளராக நியமித்து வெளிப்படையான நம்பிக்கை ஒன்றை நிறுவினார். பிலிப்பின் பின்வரும் நடவடிக்கைகள் குறித்து டேவிட் உமது சட்ட ஆலோசனையை நாடுகின்றான். நம்பிக்கையாளர்கள் மற்றும் பயனாளிகள் என்போரின் கடமைகள், அதிகாரங்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக இயைபான நியதிச் சட்டப் பிரிவுகள் மற்றும் தீர்ப்புச் சட்டங்களின் துணை கொண்டு அவனுக்கு ஆலோசனை வழங்குக.

(அ). கண்டியில் அமைந்துள்ள ஒரு தேயிலைத் தோட்டம் ஒன்றும் நம்பிக்கைச் சொத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. எனவே, பிலிப் தோட்டத்தைப் பாதுகாப்பதற்காக ஒவ்வொரு மாதமும் தனது சொந்த காரில் கண்டிக்கு பயணம் செய்ய வேண்டியிருந்தது. தற்போது அவர் தனது பயணச் செலவை நம்பிக்கைச் சொத்தின் வருமானத்திலிருந்து மீட்டெடுக்கக் கருதுகின்றார்.

(ஆ). ஒவ்வொரு மாதமும், பிலிப் ஜீலியஸின் பருவ வயதை அடையாத மகள் நித்யாவின் கல்விக்காக, டேவிட்டிடம் வினவாது நம்பிக்கைச் சொத்திலிருந்து கிடைக்கப் பெற்ற வருமானத்தின் ஒரு பகுதியை ஒதுக்குகின்றார்.

(இ). நம்பிக்கைச் சொத்தின் வருமானம் ஆனது ஜீலியஸின் இரண்டு குழந்தைகளுக்கும் சமமாக பகிரப்பட வேண்டும் என நம்பிக்கை ஆவணம் குறிப்பிடுகின்றது. டேவிட்டை விட நித்யா பிலிப்புடன் நெருக்கமாக இருப்பதன் காரணமாக பிலிப் நம்பிக்கைச் சொத்தின் வருமானத்தில் அதிகமான பகுதியை நித்யாவுக்கு ஒதுக்குகின்றார்.

(ஈ). பிலிப் நம்பிக்கைச் சொத்தின் வருமானத்திலிருந்து தனது சேவைகள் மற்றும் தொந்தரவுகளுக்காக சம்பளத்தைப் பெற எதிர்பார்க்கின்றார்.

(5 × 4 =20 புள்ளிகள்)

07. 'ஆங்கிலச் சட்டத்திலும் இலங்கைச் சட்டத்திலும் தருமம் பற்றிய சட்டக் கோட்பாடு ஆனது, அடிப்படையில் ஒன்றாக இருந்த போதிலும், பயன்படுத்தப்படும் சொற்களஞ்சியத்தில் உள்ள வேறுபாடுகளைக் கவனிப்பது மிக முக்கியமானது. பொதுவாக எமது சட்டம், ஆங்கிலச் சட்டத்தினை விட சில பகுதிகளில் மிகவும் விரிவானது.'

மேலுள்ள கூற்றின் வலிதான் தன்மையை இலங்கைச் சட்டம் மற்றும் ஆங்கிலச் சட்டத்தின் கீழ் வலிதான தர்ம நம்பிக்கையின் தேவைப்பாடுகளின் பிண்ணனியில் பரிசீலிக்குக.

(20 புள்ளிகள்)

08. பின்வரும் 04 தலைப்புக்களின் மீது சிறுகுறிப்பு வரைக.

a) சைப்பிரஸ் கோட்பாடு

b) மீள் நிலைக்கு கொண்டு வருதல் ஓர் ஒப்புரவு பரிகாரம்

c) நம்பிக்கை மற்றும் நம்பிக்கைப் பொறுப்புக்கு இடையிலான வித்தியாசம்

d) 2018 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க நம்பிக்கைகள் (திருத்தச்) சட்டத்தின் முக்கிய அம்சங்கள்.

(5 × 4 =20 புள்ளிகள்)

*பதிப்புரிமை பெற்றது.*